1968 மார்ச் 20]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மூல வினாவுக்கு இது தொடர்புடையதல்ல. என்றாலும், மாமண்டூர் பகுதியில் செப்புப் படிவங்கள் கிடைக்கும் என்பதற்கான குறிப்புகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அதுபற்றி ஆராய்ச்சி செய்கிறார்கள். முழு விவரம் தெரிந்த பிறகு வெட்டி எடுக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

List Irrigation Scheme in Manavalakurichi

*** 258 *Q.*—THIRU A. CHIDAMBARANATHA NADAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—**

(*a*) the present position of the Lift Irrigation Scheme from Periyakulam tank in Manavalakurichi village in Kalkulam taluk ;

(*b*) whether the Government have received the unanimous resolutions recommending to take up this scheme from the District Development Council of the Kanyakumari district ; and

(*c*) if so, the progress so far made to acheive this end?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) பெரியகுளம் இறைவைப் பாசனத் திட்டம் 1957-ம் ஆண்டில் ஆய்வு செய்யப்பட்டது. இத் திட்டத் திற்கு அதிகச் செலவாகுமென்று தெரிந்ததால் தொடர்ந்து இதனைச் செயல்படுத்தவில்லை.

(இ) இல்லை.

(உ) இக் கேள்வி எழவில்லை.

மதுராந்தகம் ஏரி

*** 259 வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

மதுராந்தகம் ஏரி தூர் வாருவதற்காக எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது அரசாங்கத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவரவர்களே, மதுராந்தகம் ஏரி மிகவும் தூர்ந்து போயிருக்கிறது. அதனுடைய கரைகள் வெள்ளக் காலத்தில் மிகவும் அபாயகரமாகயிருப்பதால் ஏரியின் உள்ளே இருக்கும் மண்ணைக் கொண்டோ அல்லது வெளியிலேயிருந்து மண்ணைக் கொண்டு வந்தோ அதன் கரைகளைப் பலப்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : கரையைப் பலப்படுத்தும் உத் தேசம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் உள்ளேயிருக்கும் மண்ணைக் கொண்டு ஏரியின் கரைகளை அகலப்படுத்த இப்பொழுது பல இடையூறு கள் இருக்கின்றன. காரணம், அங்கே தண்ணீர் தேங்கியிருப்பதால் மண்ணை எடுக்க வழியில்லை. தண்ணீரை வற்றச் செய்துவிட்டு மண்ணை எடுத்து கரைகளை அகலப்படுத்தலாம் என்றால் விவசாயிகள் சம்மதிப்ப தில்லை. கனம் உறுப்பினர்கள் விவசாயிகளின் சம்மதத்தை வாங்கினால் அந்த மண்ணை எடுத்து கரைகளை அகலப்படுத்த இயலும். இல்லா விட்டால் 7 அல்லது 8 மைல் தூரத்திலிருந்து மண்ணைக் கொண்டுவந்து அகலப்படுத்த வேண்டியிருக்கும். அதற்குத் திட்டமிட்டிருக்கும் செலவை விட 4 மடங்கு அதிகமாகச் செலவாகும்.

திரு. கரு. சிமைச்சாமி : தலைவரவர்களே, இந்தக் கண்மாய் மராமத் துச் செய்யும் பொழுது கரைகளைப் பலப்படுத்துகிறார்கள். அப்பொழுது மணல் மேடாகி விடுகிறபடியால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டு ஒரு